# ஷேர் ஆட்டோ, காரில், 1.78 லட்சம் பேர் பயணம்

**சென்னை, பிப். 7–**

மெட்ரோ ரயில் பயணியர், ஷேர் ஆட்டோ மற்றும் காரில், 1.78 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.



இப்பயணியர் நிலையத்தில் இருந்து, செல்ல வேண்டிய இடங்களுக்கு, விரைவாக செல்ல ஏதுவாக, மெட்ரோ நிர்வாகத்தால், நிலையங்களில், 5, 10 ரூபாய் கட்டணத்தில், ஷேர் ஆட்டோ மற்றும் கார் வசதி செய்யப்பட்டு உள்ளது.

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., அண்ணா நகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்துார் மற்றும் வடபழனி நிலையங்களில், ஷேர் காரில், 2019 ஜனவரியில், 3,713 பேர் பயணம் செய்துள்ளனர்.

கிண்டி, திருமங்கலம், ஆலந்துார், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை மற்றும் அசோக் நகர் நிலையங்களில், ஷேர் ஆட்டோவில், 27 ஆயிரத்து, 817 பேர் என, மொத்தம், 31 ஆயிரத்து, 530 பேர் பயணம் செய்துள்ளனர்.

ஷேர் ஆட்டோ மற்றும் கார்களில், 2018 ஆக., 11ம் தேதியில் இருந்து, 2019, ஜனவரி வரை, 1.78 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.